செய்தி வெளியீடு எண்: 029 நாள் : 15.01.2014

## செய்தி வெளியீடு

பத்திரப் பதிவுத் துறையின் பணிகள் மக்களின் அன்றாடப் பணிகளுடன் பின்னிப் பிணைந்துள்ளது. சொத்து பதிவு செய்தல், திருமணம் பதிவு செய்தல், சொத்து பரிமாற்றம், சொத்து சம்பந்தப்பட்ட விவரங்களை அளித்தல், பராமரித்தல், நிலத்தின் மதிப்பீட்டு விலை நிர்ணயித்தல் போன்ற பல்வேறு பணிகளை இத்துறை செய்து வருகிறது.

பொது மக்களுடன் அதிக அளவு தொடர்பு கொண்டுள்ள பதிவுத் துறை அலுவலகங்கள் பல, தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்த கட்டடங்கள் அனைத்தும் போதிய அடிப்படை வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதியின்றி உள்ளதால், இங்கு வருகை தரும் பொது மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இந்தக் கட்டடங்களில் அலுவலகப் பணியாளர்கள் பணி புரிவதற்கு போதுமான இட வசதி, பாதுகாப்பான வைப்பறைகள் ஆகியன இல்லாத நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்கள் கட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது. புதியதாக கட்டப்படும் கட்டடங்கள் அலுவலர்களுக்கான அறைகளுடன், கணினி அறை, பதிவுருக்கள் பாதுகாப்பு அறை, பொது மக்கள் காத்திருப்பதற்கான அறை, முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தள மேடை, அகலமான நடைபாதை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், நவீன கழிப்பறை போன்ற வசதிகளுடன் அமையப் பெறும்.

2011-12ஆம் ஆண்டில் 26 கோடி ரூபாய் செலவில் 52 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டவும், 2012-13 ஆம் நிதியாண்டில் 48 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 இடங்களில் 29 சார் பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் கட்டுவதற்கும் மற்றும் தனித்தனி இடங்களில் உள்ள 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு தனித் தனியாக சொந்தக் கட்டடங்கள் கட்டவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளித்த உத்தரவின் பேரில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, நடப்பு நிதியாண்டில் திண்டுக்கல், உதகமண்டலம், கோயம்பேடு மற்றும் செய்யார் ஆகிய 4 இடங்களில் 11 சார் பதிவாளர் அலுவலகங்களுடன் கூடிய ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகக் கட்டடங்கள் சூரிய சக்தியின் மூலம் பெறப்படும் மின்சாரத்தை பயன்படுத்தும் அமைப்புடன் கட்டுவதற்கும் 35 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குத் தனித் தனியே கட்டடங்கள் கட்டுவதற்கும் நிர்வாக அனுமதி அளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும், ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகக் கட்டடங்களுக்கென 10 கோடியே 75 லட்சம் ரூபாய் மற்றும் ஒரு சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்ட 55 லட்சம் ரூபாய் வீதம் 35 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு 19 கோடியே 25 லட்சம் ரூபாய் என மொத்தம் 30 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:-15.1.2014.